பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
21 08-2025 THURSDAY 6.30 PM

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

2. குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

3. மாநிலத்தில் பட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் அரசு அதிகாரிகளுக்கே பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>>

நாடளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக, ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவிற்கு மாநிலங்களவை இன்று ஒப்புதல் அளித்தது.

இந்த கூட்டத்தொடரின்போது மக்களவையில் 14 முக்கிய மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், இதில் 12 மசோதாக்கள் நிறவேற்றப்பட்டதாகவும் அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் திரு சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு மேற்கொண்ட பயணம் குறித்த சிறப்பு விவாதங்களும் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

*இந்த கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட விதம் ஏற்புடையது அல்ல என்றும் அவர் கூறினார்.*

*இதன் காரணமாக, 37 மணிநேரத்திற்கு மட்டுமே மக்களவை செயல்பட்டதாகவும் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா, நல்ல அம்சங்களை ஊக்குவிப்பதாகவும், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் இளையோருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீய அம்சங்களை தடை செய்ய வகை செய்வதாகவும் மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.*

*மூன்று முக்கிய அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*மின்னணு விளையாட்டுகளுக்கும், இணையதள விளையாட்டுகளுக்கும் ஊக்கம் அளிக்க இதில் வகை செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*பணம் சார்ந்த இணையதள விளையாட்டுகளுக்கு தடை விதிப்பதற்கான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.*

*இதற்கிடையே, இந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று வேலூர் மாவட்டத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் திரு ரமேஷ்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Voice Byte – ரமேஷ்குமார்- 43 Sec. )*

*<<<<<<>>>>>>*

*இந்நிலையில், ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியிருப்பது வரவேற்கத்தக்கது என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளர்.*

*திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்வதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.*

தமிழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழர்களின் நலனுக்கும் எதிராக திமுக அரசு செயல்படுவதாகவும் திரு சீமான் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அரசு அதிகாரிகளுக்கே பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் மாவட்டத்தில் மணல் கடத்தலை தடுக்க முயன்ற பெண் கிராம நிர்வாக அலுவலர் மீது மணல் கடத்தல்காரர்கள் நடத்திய தாக்குதல் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளிகளிடமிருந்து அரசு அதிகாரிகளுக்கே பாதுகாப்பு வழங்க இயலாத திமுக அரசு, பொதுமக்களை எவ்வாறு பாதுகாக்கும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

<<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு சி பி ராதாகிருஷ்ணனும், எதிர்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் திரு சுதாகர் ரெட்டியும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9-ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ஆனைக்கட்டி பாளையத்தில் ராசிபுரம் அரசு பட்டுக்கூடு வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்

பட்டு வளர்ச்சித்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கிராமப்புற இளையோர் மற்றும் மகளிர் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பட்டு விவாசயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கி வருவதாகவும் திரு தா மோ அன்பரசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக தொழில் முனைவோர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் காமாட்சிபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறு-குறு தொழில் முனைவோர் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் பங்கேற்று தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை காட்சிப்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – ராஜ்குமார் – 45 Sec.)*

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(Sound Byte - செந்தாமரை கண்ணன் – 42 Sec. )*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில், நடைபெற்ற ''உயர்வுக்குப் படி'' நிகழ்ச்சியை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

*தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு 75 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பீடு வழங்கக்கோரி அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு இளம் பகவத் கூறியுள்ளார்.*

--------------

*பெரம்பலூரில் சர்வதேச மனிதநேய தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு அருண்ராஜ் இன்று தொடங்கிவைத்தார்.*

-----------------

*செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள ஏரி காத்த ராமர் திருக்கோவில் குடமுழுக்கு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.*

---------------------

*நாமக்கல்லில் போதைப்பொருள் தடுப்பு, சாலை பாதுகாப்பு மற்றும் உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் இன்று நடைபெற்றது.*

---------------

*சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 11 வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

<<<<<<>>>>>>

## *<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கப்பதக்கங்களை வென்றது.*

*கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஜுனியர் பத்து மீட்டர் பிரிவில் Abhinav Shaw தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஆடவர் ஜுனியர் மற்றும் சீனியர் குழு பிரிவுகளிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கங்கள் கிடைத்தன.*

---------------

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kajal மற்றும் Sarika அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*பல்கேரியாவின் Samokov-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 72 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Kajal - கிர்கிஸ்தானின் Kaiyrkul Sharshebaeva -வை வென்றார்.*

*53 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Sarika - சீனாவின் Tianyu Sun-ஐ வென்றார்.*

*----------*

*ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Salima Tete தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*இப்போட்டி சீனாவின் Hangzhou -ல் அடுத்த மாதம் 5-ஆம் தேதி தொடங்கி, 14-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.*

*-----------------*

*Winston Salem Open டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – நியூசிலாந்தின் Michael Venus இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-3, 10-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் Austin Krajicek – மெக்சிகோவின் Santiago Gonzalz இணையை வென்றது.*

*<<<<<<END>>>>>>*